( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.228/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சென்னப்பன் | தொழில் | 2ம் நிலை காவலர் |
| கிராமம் | திருப்பத்துர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 07th day of November 2023.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.- (எதிரி தினேஷ்குமார் ஆஜரில் உள்ளார்)**

நான் திருப்பத்துர் நகர காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.05.2023 அன்று திருப்பத்துர் நகர காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் செல்வி,சிவன்யா அவர்களுடன் நானும், முதல் நிலை காவலர் குமார் ஆகியோர்கள் மாலை 4.00 மணிக்கு மது விலக்கு தொடர்பாக திருப்பத்துர் நகர காவல் நிலையத்திற்கு உட்பட்ட பொன்னியம்மன் கோயில் பக்கமாக கண்கானிப்பில் இருந்தபோது, பொன்னியம்மன் கோயில் முகப்பில் எதிரி அவரது இரு சக்கர வாகனத்தில் கர்நாடக மதுபானமான ஸ்டாங் XXX rum 5 பாக்கெட்டுகள் மற்றும் தமிழ்நாடு மதுபான பாட்டல்கள் டைமண்டு எம்ஜிஎம் XXX rum 3 பாட்டல்கள் வைத்திருந்தார். பின்பு மேற்கண்ட வழக்கு சொத்தினை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அவ்வாறு கைப்பற்றியதற்கு சாட்சியாக இருந்து நான் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் குமார் என்ற காவலரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார். **அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரியை மாலை 05.00 மணியளவில் கைது செய்து எதிரியையும், வழக்கு சொத்துக்களையும் காவல் நிலையத்திற்கு உதவி ஆய்வாளர் கொண்டு வந்தார். பின்பு எதிரி தினேஷ் என்பவர் மீது உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் கர்நாடக மற்றும் தமிழ்நாடு மதுபானங்களை கைப்பற்றியதற்கு மட்டும் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிரி இரு சக்கர வாகனத்தில் மதுபானம் வைத்திருந்தார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவயிடம் சென்று விசாரித்து பொதுமக்கள் சொல்லியதின் பேரில் எதிரியை அடையாளம் கண்டுக்கொண்டோம் என்றால் சரிதான். பிடித்து எதிரியை நகர காவல் நிலையத்திற்கு தான் அழைத்து வந்தோம். எதிரியை கைது செய்த விவரம் உயர் அதிகாரிக்கு உதவிஆய்வாளர் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். அதன் பிறகு உயர் அதிகாரி எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் கூறியதின் பேரில் ஆவணங்கள் தயார் செய்து அதில் நானும், காவலர் குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஆவணங்கள் தயார் செய்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக சம்பவயிடத்தில் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. படிவம் 91 மதுபான பாக்கெட்டுகள் கைப்பற்றியதாக எந்த விவரமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் கைப்பற்றியது மது பாட்டில்கள் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட கைப்பற்றப்ட்ட சொத்தை இரசயான பரிசோதனைக்கு அனுப்ப உதவி ஆய்வாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வேறு வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட மதுபான பொருட்களை வைத்து பொதுமக்கள் கூறிய தகவலின் பேரில் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது ஒரு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் தகவல் கூறி அடையாளம் காட்டிய பொதுமக்களை நாங்கள் சாட்சியாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

Signature of Witness.

( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.228/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பெரியசாமி | தொழில் | முதல் நிலை காவலர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 07th day of November 2023.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.- (எதிரி தினேஷ்குமார் ஆஜரில் உள்ளார்)**

நான் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.05.2023 அன்று திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் செல்வி,சிவன்யா அவர்களுடன் நானும், முதல் நிலை காவலர் செந்தில் ஆகியோர்கள் பகல் 16.00 மணிக்கு மது விலக்கு தொடர்பாக திருப்பத்தூர் நகர காவல் நிலையத்திற்கு உட்பட்ட பொன்னியம்மன் கோயில் பக்கமாக கண்கானிப்பில் இருந்தபோது, பொன்னியம்மன் கோயில் முகப்பில் எதிரி அவரது இரு சக்கர வாகனத்தில் கர்நாடக மதுபானமான XXX rum 5 பாக்கெட்டுகள் மற்றும் தமிழ்நாடு மதுபான பாட்டல்கள் டைமண்டு XXX rum 3 பாட்டல்கள் வைத்திருந்தார். பின்பு மேற்கண்ட வழக்கு சொத்தினை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அவ்வாறு கைப்பற்றியதற்கு சாட்சியாக இருந்து நான் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் செந்தில் என்ற காவலரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரியை பகல் 16.30 மணியளவில் கைது செய்து எதிரியையும், வழக்கு சொத்துக்களையும் காவல் நிலையத்திற்கு உதவி ஆய்வாளர் கொண்டு வந்தார். பின்பு எதிரி தினேஷ் என்பவர் மீது உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நாங்கள் சம்பவயிடம் சென்று விசாரித்து பொதுமக்கள் சொல்லியதின் பேரில் எதிரியை அடையாளம் கண்டுக்கொண்டோம் என்றால் சரிதான். பிடித்து எதிரியை நகர காவல் நிலையத்திற்கு தான் அழைத்து வந்தோம். எதிரியை கைது செய்த விவரம் உயர் அதிகாரிக்கு உதவிஆய்வாளர் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். அதன் பிறகு உயர் அதிகாரி எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் கூறியதின் பேரில் ஆவணங்கள் தயார் செய்து அதில் நானும், காவலர் செந்தில் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். (சாட்சி தற்போது பொன்னியம்மன் கோயில் அருகே கையொப்பம் செய்ததாக கூறுகிறார்) நாங்கள் எங்களுடன் கணினி பயன்படுத்தும் நபர் யாரேனும் உடன் அழைத்து சென்றோமா என்றால் இல்லை. நான் கைொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜரானது கணினியில் அச்சடிக்கப்பட்ட ஒன்றாகும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஆவணங்கள் தயார் செய்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக சம்பவயிடத்தில் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. படிவம் 91 மதுபான பாக்கெட்டுகள் கைப்பற்றியதாக எந்த விவரமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் கைப்பற்றியது மது பாட்டில்கள் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட கைப்பற்றப்ட்ட சொத்தை இரசயான பரிசோதனைக்கு அனுப்ப உதவி ஆய்வாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வேறு வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட மதுபான பொருட்களை வைத்து பொதுமக்கள் கூறிய தகவலின் பேரில் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது ஒரு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் தகவல் கூறி அடையாளம் காட்டிய பொதுமக்களை நாங்கள் சாட்சியாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

Signature of Witness.